සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development

සමාජ සවිබලගැන්වීම්, සුබසාධන හා කන්ද උඩරට උරුමය පිළිබඳ අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT, WELFARE AND KANDYAN HERITAGE

මගේ අංකය
எனது இல
My No

ඔබේ අංකය
உமது இல: ........................................
Your No

දිනය
திகதி :
Date

2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சமுர்த்தி சட்டத்தின் 33(9) பிரிவின் பிரகாரம் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமைத்துவ சபையின் அங்கிகாரக் குறிப்பிற்கமைவாக வெளியிடப்படும் ஒழுங்கு விதிகள் :- 2018 இலக்கம் 04

சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி / வங்கிச் சங்க முகாமையாளர்களுக்கும்,

## சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்க உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு வழங்கல்

மேற்படி விடயம் தொடர்பான 2017/02 இலக்க மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்களுக்கு முகவரி இடப்பட்ட கடிதம் தொடர்பாக,

2. 2018ஆம் ஆண்டிலிருந்து வங்கிகளின் செயற்திறனை அடிப்படையாகக் கொண்டு இம்மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படும் என மேற்படி சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மாதாந்த கொடுப்பனவினை வழங்குவதற்கு ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் வினைத்திறனை மதிப்பீடு செய்வதற்கு பொருத்தமான உரிய முறையினை அறிமுகம் செய்யும் வரை கீழ்வரும் நியதிகளை அடிப்படையாகக் கொண்டு மாதாந்தக் கொடுப்பனவினை வழங்க வங்கி முகாமைத்துவசபை அனுமதி வழங்கியுள்ளது.

### 2.1 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள்

| நியதிகள் | தயாரிக்கப்பட வேண்டிய/வழங்க வேண்டிய இறுதித் திகதிகள் |
|---|---|
| I. மாதாந்த முன்னேற்ற அறிக்கை (கடன் / வைப்பு / முதலீடு) | ஒவ்வொரு மாத அறிக்கையும் அடுத்த மாதம் 05 ஆம் திகதிக்கு முன்னர். |
| II. ஆள்சார் பேரேட்டுப் பரீட்சை மீதிகள் பெறல்(கடன் /வைப்பு / முதலீடுகள்) | ஒவ்வொரு மாதமும் பரீட்சை மீதிகள பெறப்படல் - அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர். |
| III. ஆள்சார் பேரேட்டு பரீட்சை மீதிகளை பொதுப்பேரேட்டு மீதியுடன் சமப்படுத்தல் | ஒவ்வொரு மாதமும் பெறப்படல் - அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர். |
| IV. உள்ளக/வெளியக/அரச கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அனுப்புதல் | கணக்காய்வு அறிக்கை கிடைக்கப்பெற்று 14 நாட்களினுள் |

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya ,Battaramulla

අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General
Tel- 011-2873802/2872202
Fax - 011-2889002
E-mail-dg@divineguma.gov.lk

අධ්‍යක්ෂ (මානව සම්පත්) / பணிப்பாளர் ( மனிதவளம்) / Director (Human Resource)
011-2873799
011-2873996
diradmin@divineguma.gov.lk
Hot Line : 0112-889007

ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant
011-2869742
011-2869742
finance@divineguma.gov.lk

අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி ) / Director ( Micro Finance)
011-2889003
011-2887469
Hot Line:0112-885582

කාර්යාලය / அலுவலகம் / Office
011-2887280
Hot Line: 011- 2887722

**2.2 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம் :-**

| நியதிகள் | தயாரிக்கப்பட வேண்டிய/வழங்கப்பட வேண்டிய திகதி |
|---|---|
| I. வங்கி / வங்கிச் சங்க மாதாந்த முன்னேற்ற அறிக்கை வழங்கல் (மாவட்ட சமுர்த்திப் பிரிவிற்கு) | ஒவ்வொரு மாதத்திற்குமான அறிக்கைகள் அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் |
| II. முதலீட்டு பரீட்சை மீதிகள் பெறல் அதனை பொதுப்பேரேட்டுடன் சமப்படுத்தல், கடன் மற்றும் கூட்டு காப்பீட்டு நிலைமை அறிக்கைகளை தயாரித்தல் | ஒவ்வொரு மாதமும், அடுத்து வரும் மாதம் 05 ஆம் திகதிக்கு முன்னர் |
| III. உள்ளக/அரச/ வெளியக கணக்காய்வு அறிக்கைகளுக்கு பதில் அனுப்புதல் | கணக்காய்வு அறிக்கைகள் கிடைக்கப்பெற்று 14 நாட்களுக்குள் பதில் அனுப்பதல் |
| IV. வங்கி நிதிய முதலீடுகள் முதிர்வின் போது வங்கிகளுக்கு அறிவித்தல் அனுப்புதல் | முதிர்வடையும் தினத்திலிருந்து கூடியது 05 தினங்களிற்குள். |

2.3 சமுர்த்தி வங்கிகளில் ஆள்சார்பேரேட்டு பரீட்சை மீதியினை (பொதுப் பேரேட்டுடன்) சமப்படுத்தும் போது 2017.12.31 ஆம் திகதியில் சமப்படாத பரீட்சை மீதிகள் காணப்படும் வங்கிகள் அணைத்தும் ஒவ்வொரு மாத இறுதித் தினத்திலும் கட்டாயமாக ஆள்சார் பேரேடுகளின் பரீட்சை மீதியினை பெற்றுக்கொள்ளல் வேண்டும். அதேபோல் 2017.12.31 இல் சமப்படாத வித்தியாசம் காணப்படும் போது அவ் வித்தியாசத்தினை மாறாத விதத்தில் அல்லது வித்தியாசத்தினை குறைத்துக் கொண்டு முன் செல்லும் வங்கிகளுக்கு மாதந்தக் கொடுப்பனவினை பெற்றுக்கொள்ள இடமளிக்கப்படுகிறது. இச்சலுகை வங்கிச் சங்கங்களுக்கு பொருந்தாது.

2.4 சமுர்த்தி வங்கிகள் / வங்கிச் சங்கங்களின் மாதாந்த கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வதற்கு பூர்த்தி செய்ய வேண்டிய நியதிகளை உரிய தினத்திற்கு முன்னர் பூர்த்தி செய்யாதுவிடின் அந்த மாதத்திற்கு உரித்தான கொடுப்பனவினை பெற்றுக்கொள்வதற்கு எந்தவொரு உத்தியோகத்தருக்கும் அருகதை கிடையாது. இருந்தும் விசேட அல்லது இயற்கை அனர்த்த நிலைமைகளினால் உரிய தினத்திற்கு முன்னர் வேலைகள் முடிக்க முடியாதிருப்பின் அதற்கான விசேட அனுமதியினை பணிப்பாளர்(குறுநிதி) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

**03. மாதாந்த கொடுப்பனவிற்குரித்தான புதிய உத்தியோகத்தர்களை உள்வாங்குதல்.**

3.1 கீழ்குறிப்பிடப்படும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் விடயப்பொறுப்புக்களை பூரணமாக நிறைவேற்றிய பின்னர் அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள மாதாந்த கொடுப்பனவுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இக்கொடுப்பனவு 2018.01.01ஆம் திகதியிலிருந்து ஏற்புடையதாகும்.

| வங்கி | பதவி | மாதாந்த கொடுப்பனவு (ரூபா) |
|---|---|---|
| சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி | வலய உதவியாளர் (கள உதவியாளர்) | 2,000.00 |
| சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம் | கருத்திட்ட முகாமையாளர் | 2,500.00 |
| சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம் | கருத்திட்ட உதவியாளர் | 2,000.00 |

3.2 பந்தி இலக்கம் 3.1 இல் பதவி குறித்துள்ள உத்தியோகத்தர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள கடமைகளுக்கு மேலதிகமாக கீழ் குறிப்பிடப்படும் பணிகளில் அவர்கள் ஈடுபடும் போது மாத்திரமே இம்மாதாந்த கொடுப்பனவு தொகையினை பெற தகுதி பெறுகின்றனர்.

| பதவி | மேற்கொள்ள வேண்டிய பணிகள் |
|---|---|
| வலய(கள) உதவியாளர் | I. சமுர்த்தி வங்கிக் கடன் திட்டங்களுக்கு முன்/பின் பின்னூட்டல்களை மேற்கொள்ளல்.<br>II. தவணை தவறிய மற்றும் காலம் கடந்த கடன்களை அறவிட நடவடிக்கை எடுத்தல்.<br>III. சமுர்த்தி வங்கி, வலய மற்றும் மாதாந்த முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை ஒழுங்கு செய்தல் மற்றும் தகவல்களை ஒழுங்குபடுத்துதல்.<br>IV. சமுர்த்தி வங்கிச் சூழலை உரிய முறையில் பேண ஒத்துழைப்பு வழங்குதல்.<br>V. கடமைப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள வங்கி விடயத்துக்கான ஏனைய நடவடிக்கைகளை உரிய முறையில் மேற்கொள்ளல். |
| கருத்திட்ட முகாமையாளர் | I. சமுர்த்தி வங்கி/வங்கிச் சங்க கடன் கோரிக்கைகளுக்கு உரிய கருத்திட்ட அறிக்கைகள் தயாரிப்பதற்கான ஒத்துழைப்பினை வழங்குதல், முன்னேற்றங்களை மதிப்பிடல், சிபாரிசுகளை வழங்கல்.<br>II. சமுர்த்தி இசுறு கடன் திட்டத்தின் கீழான கருத்திட்டங்களை முன்/பின் பின்னூட்டல்களை மேற்கொள்ளல்.<br>III. வாழ்வாதார சுழற்சி கடன் திட்டத்தின் கீழ் கடன்களை விடுவிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கல்<br>IV. குடும்பங்களை பலப்படுத்தும் வேலைத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கல். |
| கருத்திட்ட உதவியாளர் | I. சமுர்த்தி வங்கி / வங்கிச் சங்க கடன் கோரிக்கைகளுக்கு உரிய கருத்திட்ட அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் முன்னேற்றங்களை ஆய்வு செய்தல்.<br>II. சமுர்த்தி இசுறு கடன் திட்டத்தின் கீழான கருத்திட்டங்களை முன்/பின் பின்னூட்டல்களை மேற்கொள்ளல்.<br>III. வாழ்வாதார கடன் திட்டத்தின் கீழ் கடன்களை விடுவிப்பதற்கு ஒத்தழைப்பை வழங்கல்.<br>IV. குடும்பங்களை பலப்படுத்தும் வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கல். |

3.3. பந்தி இலக்கம் 3.1 இல் குறிப்பிட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு மாதாந்த கொடுப்பனவுகளை வழங்கும் போது 3.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகள் ஈடேற்றப்பட்டுள்ளதை வங்கி/வங்கிச் சங்க முகாமையாளரினால் உறுதிப்படுத்தலை பெற்றுக்கொண்டதன் பின்னர் மாத்திரமே கொடுப்பனவினை வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இருந்தும் மேற்படி பந்தி இலக்கம் 02 இல் குறிப்பிட்டுள்ள நியதிகளை பூரணப்படுத்த முடியாத சந்தர்ப்பங்களில் வங்கி/வங்கிச் சங்கங்களின் உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு

வழங்க முடியாது போவதுடன் மேற்படி 3.1இல் குறித்துள்ள உத்தியோகத்தர்களுக்கும் இம் மாதாந்தம் கொடுப்பனவினை வழங்க முடியாது போகும்.

4. மாதாந்த கொடுப்பனவினை வழங்கல் தொடர்பாக விடயங்களை ஆராய்ந்து பார்த்தல் மற்றும் அறிக்கையிடல் போன்றன மாவட்ட கணக்காய்வு / கண்காணிப்பு அலகிற்கு வழங்கப்படுவதுடன் இவ் ஒழுங்கு விதிகளுக்கு மாறான விதத்தில் செயற்படும் சமுர்த்தி வங்கிகள் / வங்கிச் சங்கங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளருக்கு அதிகாரம் வழங்கப்படுகின்றது.

கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன
தலைவர், சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமைத்துவச் சபை
பணிப்பாளர் நாயகம்,
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்.

Translated by – I.Aliyar